numbers and educated men will remain there and do research work. So, will the Hon. Minister for Education think of taking steps in Melt compaign

மாண்புமிகு டாக்டர் (திமருதி) சத்தியவாணிமுத்து : களையெல்லாம் மனதில் வைத்துத்தான் இப்படிப்பட்ட ஒரு மாளிகை தேவை என்று அரசு கருதுகிறது. இப்பொழுது இருக்கிற நகரியம், டவுன்ஷிப் விடுதியில் அதிகமான இடத்தை அமைத்துக் கட்டுவதற்கு ரூ. 1½ லட்சம் கொடைக்கானல் டவுன்ஷிப்பிற்கு மாநில அரசு கொடுத்திருக்கிறது. அது அன்னியில் ரூ. 5 லட்சம் செலவில் ஒரு மாளிகை கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. போதுமான இடம் இல்லாத காரணத்தினுல் இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியது அனைத்தையும் அரசாங்கம் கவனித்துக் கொண்டிருக்கிறது.

Pipes purchased by Satankulam Panchayat Union

* 66 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state :

(a) whether the Governmnt are aware of the misappropriation of the pipes purchased by the Satankulam Panchayat Union Council for the use of Pudukulam Panchayat about 6 years ago ;

(b) whether any Police enquiry was made regarding the same; and

(c) if so, the particulars thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) புதுக்குளம் பஞ்சாயத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுவதற்காக சாத்தான் குளம் பஞ்சாயத்து யூனியனுல் வாங்கப்பட்ட குடிநீர் குழாய்கள் கையாடல் செய்யப்பட்டதாக தகவல் ஏதும் தெரியவில்லை.

(இ) & (உ) : எழவில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதுக்குளம் பஞ்சாயத்துக்காக வாங்கப்பட்ட குழாய்களை வேறு வேலைக்கு உபயோகப்படுத்தி, அதன் காரணமாக புதுக்குளம் பஞ்சாயத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்படாமல், அல்லது கட்டியும் மக்களுடைய உபயோகத்திற்கு வராமலும் இருப்பது போன்று, சம்பந்தப்பட்ட அடுத்த இரண்டு பஞ்சாயத்துக்களிலும் அந்த நிலை இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆமெனில் அதைப்பற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி கையாடலா என்று கேட்டார்கள், மோசடியா என்று கேட்டார்கள். மோசடி இல்லை என்று நான் சொன்னேன். குழாய் வழங்குவதிலே சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்குத் தகவல் தந்திருக்கிருர்கள். தவறுதலாக குழாய்கள் வழங்கியவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. சங்கான்குடியிருப்பு

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணி முடிவடைந்து விட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மோட்டார் விசையேற்றம் வாங்கப்பட்டு அவை பொருத்தப்பட வேண்டியிருக்கிறது. மேற்குறிப்பிட்ட குழாய்கள் எந்த அளவுக்கு குறைந்துள்ளன என்று முடிவு செய்த பின்னுலே இந்தப் பணிக்கு முடிவான தொகை செலுத்தப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. வேலை முடிந்து விட்டதா, இல்லையா என்பதுபற்றித் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

மு.ப. 9–30 திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்தக் குழாய்கள் வாங்கப்பட்ட நேரத்தில் இந்த மூன்று பஞ்சாயத்துக்களுக்காக என்று வாங்கப்பட்டன. அவற்றில் சங்கான்குடியிருப்பில் வேலை முடிவாகிவிட்டது. பாக்கி இரண்டு பஞ்சாயத்துக்களிலும் வேலை முடியாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இந்தப் பஞ்சாயத்துக்களில் மேல் நிலை நீர்த் தேக்கத்திற்காக குழாய் இல்லை என்று சொல்லாமல், வேலையை முடிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் தனிக் கேள்வி கொடுத்தால், மேலும் விவரம் சேகரித்துக் கொடுக்கிறேன்.

ரெகுநாதபுரத்தில் வெட்டப்பட்ட கிணறு

* 67 வினு—திரு. எம். பூபதி : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் ரெகுநாதபுரத்தில் ரூ. 50,000 செலவு செய்து 70 அடி ஆழம் வெட்டப்பட்ட கிணற்றின் நீளம், அகலம் எத்தனை அடி?

(இ) இக்கிணற்றில் தினசரி எத்தனை கேலன் தண்ணீர் கிடைக்கின்றது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) நீளம் 33 அடி 6 அங்குலம், அகலம் 32 அடி.

(இ) ஒரு நாளைக்கு 10,500 கேலன் தண்ணீர் கிடைக்கிறது.

Buildings for Commercial Taxes Department at Ootacamund

* 68 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state—

(a) whether the construction of the Office Buildings of the Commercial Taxes Department has been taken up at Ootacamund; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) தொழில் நுட்ப ஒப்பளிப்புக்குப் பின்னரும், இதனை நிறைவேற்றுவதற்கான நிறுவனத்தை முடிவு செய்த பின்னரும் பணி தற்போதுதான் தொடங்கியுள்ளது. உதகமண்டலத்தில் மழை நின்ற பின்னர், இப்பணி விரைந்து நிறைவேற்றப்படும்.